# குழித்துறை நகராட்சி

## நிர்வாக அறிக்கை
## 2009–2010
## பொருளடக்கம்


1. நகர் மன்றம்
2. நிர்வாகம்
    அ) அமைப்பு பணி
    ஆ) வரவினஙகள் விபரம்
3. கல்வி வசதிகள்
4. சாலைகள் கட்டிடஙகள்
5. தெரு விளக்கு வசதிகள்
6. குடிநீர் விநியோகம்
7. நகரமைப்பு பிரிவு
8. பொது சுகாதாரம்
9. முடிக்கப்பட்ட பணிகள்
10. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்
11. சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா பணிகள்
12. வழக்குகள்
13. தணிக்கை
14. நிதி நிலைமை
15. முடிவுரை

## 1. நகர் மன்றம்

| வ. எண் | பெயர் | வார்டு எண் மற்றும் பதவி | |
|---|---|---|---|
| 1 | திரு.பொன். ஆசைத்தம்பி | 20 | : நகர் மன்றத் தலைவர் |
| 2 | திரு.எஸ். யூஜின் | 19 | நகர் மன்றத் துணை தலைவர் |
| 3 | செல்வி.டி. ஞானசெல்வி | 1 | நகர்மன்ற உறுப்பினர் |
| 4 | திருமதி.ஆர். மார்கிரேட் கெலன்மணி | 2 | வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 5 | திரு.ற்றி. ஷெர்லி நெல்சன் | 3 | நகர்மன்ற உறுப்பினர் |
| 6 | திரு.வி. விஜீ | 4 | நகர்மன்ற உறுப்பினர் |
| 7 | திருமதி. எம். ஜெயலெட்சுமி | 5 | வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 8 | திருமதி.ஜி.எஸ். மினிகுமாரி | 6 | வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 9 | திருமதி.வி. ரேணுகா | 7 | நகர்மன்ற உறுப்பினர் |
| 10 | திரு.எம். பிரவின்ராஜா | 8 | ஒப்பந்தகுழு உறுப்பினர் |
| 11 | திரு.எம். மோசஸ் சுதீர் | 9 | நகர்மன்ற உறுப்பினர் |
| 12 | திரு.என். சுந்தர்ராஜ் | 10 | நகர்மன்ற உறுப்பினர் |
| 13 | திரு.ஏ. ராஜசேகர் | 11 | நியமனக்குழு உறுப்பினர் |
| 14 | திருமதி.எஸ். மேரி ஜெயந்தி | 12 | வரிமேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 15 | திருமதி.எஸ்.பி. ஜெலிலா ராணி | 13 | நகர்மன்ற உறுப்பினர் |
| 16 | . திரு.ற்றி. சேகர் | 14 | நகர்மன்ற உறுப்பினர் |
| 17 | திரு.என். ஜோசப் | 15 | நகர்மன்ற உறுப்பினர் |
| 18 | திருமதி.சி. செல்வகுமாரி | 16 | நகர்மன்ற உறுப்பினர் |
| 19 | திருமதி.எ.எம்.வி டெல்பின் | 17 | நகர்மன்ற உறுப்பினர் |
| 20 | திரு.கே. இரத்தினமணி | 18 | நகர்மன்ற உறுப்பினர் |
| 21 | திரு.பொன். சகாதேவன் | 21 | நகர்மன்ற உறுப்பினர் |

நகர் மன்றத் தலைவர்:–

திரு.பொன். ஆசைத்தம்பி 1–4–2009 முதல் 31–3–2010 முடிய தொடர்ந்து தலைவராக இருந்தார்.

## நிர்வாக அதிகாரிகள்

### ஆணையர்:–

1. திரு.வி. ஜார்ஜ், பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு — 1–4–2009 முதல் 15–07–2009

2. திருமதி.எம்.ஆர். வசந்தி, மேலாளர் மற்றும் ஆணையர் பொறுப்பு . — 16–07–2009 முதல் 19–07–2009

3. திரு.எம்.இ. லோகநாதன், ஆணையாளர் — 20–07–2009 முதல் 05–02–2010

4. திரு.பி.கே. ரமேஷ், நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு — 06–02–2010 முதல் 31–3–2010

### பொறியாளர்:–

1. திரு.வி. ஜார்ஜ், பொறியாளர், குழித்துறை நகராட்சி — 01–04–2009 முதல் 15–07–2009

2. திருமதி.ப. குறள்செல்வி, பொது பணிமேற்பார்வையளர் மற்றும் பொறியாளர் பொறுப்பு — 16–07–2009 முதல் 26–07–2009

3. திரு.பி.கே.. ரமேஷ், பொறியாளர் — 27–07–2009 முதல் 31–03–2010

### மேலாளர்:–

1. திருமதி.எம்.ஆர். வசந்தி, மேலாளர் — 01–04–2009 முதல் 31–03–2010

# அமைப்பும் ஆட்சியும்

## நகராட்சி எல்கை

குழித்துறை நகராட்சி 1913–ம் வருடம் தோற்றுவிக்கப்பட்ட தேதி முதல் இந்நகராட்சி மூன்றாம் நிலையாக திகழ்ந்தது.. 22–5–1998 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுத் துறை (நிதி–5) அரசாணை எண்.85–ன்படி 22–5–98 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகர எல்கைக்குள் விளவஙகோடு, நல்லூார் மற்றும் பாகோடு கிராமஙகள் அடஙகியுள்ளது.

நகராட்சியில் பரப்பளவு 5.15 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2001–ம் ஆண்டு கணக்கின்படி நகரின் மக்கள் தொகை 20326. அதில் 9940 ஆண்களும், 10386 பெண்களும் ஆகும். அறிக்கை ஆண்டில் நகராட்சி எல்கையிலும் தொதியிலும் யாதொரு மாற்றமுமில்லை. அறிக்கை ஆண்டில் இந்நகரம் 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. வார்டு எண்.3,6,11,14,16 மற்றும் 18 பெண்களுக்காக (பொது) வும் , வார்டு எண்.7 தாழ்த்தப்பட்ட பெண்ணுக்காகவும் அரசாணை எண்.89 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுத் துறை நாள் 20–8–96–ன்படி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

25–10–2001 முதல் பொது மக்களால் தேர்வு செய்யப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளனர்.

## கூட்டஙகள்

பொது மக்களால் தேர்வு செய்யப்பட்ட மன்றம் 25–10–2006 முதல் செயல்பட்டு வந்தது.. 1–4–2009 முதல் 31–3–2010 முடிய மன்ற கூட்டத்தில் வைத்த பொருள்கள் அனைத்தும் முடிவு செய்யப்பட்டன.

சாதாரண கூட்டஙகள் மாதத்தில் ஒன்றுக்கு குறையாமலும் மற்றும் வேண்டும் போது அவசர கூட்டஙகளும் ஒழுஙகாக நடைபெற்றன. அறிக்கை ஆண்டில் நடைபெற்ற கூட்டஙகள் 21 இவற்றில் சாதாரண கூட்டஙகள் 10 அவசரக் கூட்டஙகள் 11 ஆகும். இதில் 320 பொருட்கள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்பட்டன. மேற்படி பொருட்கள் அனைத்தும் அந்தந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டன. தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 3–வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி மன்ற கூட்டஙகள் நடத்தப்பட்டன. நகர் மன்ற உறுப்பினர்களுக்கு அமர்வுபடியாக நிதியாண்டில் 61,740/– செலவிடப்பட்டன.

## குழுக்கள்

25–10–2006 முதல் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் தலைவராக பணியாற்றி உள்ளார். அறிக்கை ஆண்டில் நியமனக்குழு கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. வரி முறையீட்டுக்குழு கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் 14 மனுக்கள் வைக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன.

## 2) நிர்வாகம்

இந்நகராட்சி அலுவலக பணியாளர்கள் மற்றும் இதர பிரிவு பணியாளர்களின் சம்பளத்திற்காக ரூ.106.60 லட்சம் ஓய்வூதிய வகையில் ரூ.1500000/— மற்றும் இதர வகையில் 300000/—ம் செலவாகி உள்ளது. ஆணையாளர் ஊதியம் மற்றும் அகவிலைப்படி அரசாங்கத்திலிருந்து பெறப்பட்டு வருகிறது. பயணப்படி, மருத்துவ படி மற்றும் வீட்டு வாடகைப்படி நகராட்சி நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது.

| | |
|---|---|
| மேலாளர் | – 1 |
| கணக்கர் (உதவியாளர் நிலையில்) | – 1 |
| இளநிலை உதவியாளர் | – 5 |
| பதிவுறை எழுத்தர் | – 1 |
| தட்டச்சர் | – 1 |
| புள்ளி விபர குறிப்பாளர் | – 1 |

### முறையீடுகள்:—

நகராட்சி பணியாளர்களால் அறிக்கை ஆண்டில் ஒழுஙகு நடவடிக்கையின் மேல், உயர் அதிகாரிகளுக்கு மேல் முறையீடுக்ள் ஏதும்செய்யப்படவில்லை.

### வரியினஙகள் விபரம்:—

நடப்பாண்டில் இந்நகராட்சியில் சொத்துவரி இனத்தில் வரிவிகிதம் ரூ.15.50 சதவீதம் என நிர்ணயம் செய்யப்பட்டு மண்டலம் எ.பி.சி. என பிரிக்கப்பட்டு சதுர அடி அடிப்படையால் கொண்டு புதிய வரிவிதிப்புகள் ஏற்படுத்தப்படுகின்றது. அவ்வகையில் நடப்பாண்டில் 385 எண்ணம் புதிய வரிவிதிப்புகள் ஏற்படுத்தப்பட்டும் 17 எண்ணம் வரிவிதிப்புகள் ரத்து செய்யப்பட்டும் உள்ளன. அதன்படி நடப்பாண்டில் 8306 வரிவிதிப்புகள் உள்ளன. புதிதாக வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்ட வகையில் ரூ.3.10 லட்சம் ஆண்டுக்கு வருமானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்ட கட்டிடஙகளின் எண்ணிக்கை எதுமில்லை.

வருட வாடகை மதிப்பு ரூ.180/— வரையிலும் உள்ள கட்டிடஙகளுக்கு பவரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது மற்றும் காலிமனை வரி அரையாண்டிற்கு ரூ.1000/— விலை மதிப்பிற்கு ரூ.1/— வீதம் வரி விதிக்கப்பட்டு உள்ளது.

| | |
|---|---|
| வருவாய் ஆய்வாளர் | – 1 |
| வருவாய் உதவியாளர் | – 5 |

## வரி இனஙகளும் கேட்பும் வசூலும்

**சொத்துவரி:–** அறிக்கையாண்டில் சொத்துவரியினத்தில் நிலுவை மற்றும் நடப்பு கேட்பாக ரூ.13457861 இலட்சமும் ரூ.9141747 வசூல் செய்யப்பட்டும் ரூ.4316114 லட்சம் நிலுவையாகவும் இருந்துள்ளது. மேற்படி நிலுவைத் தொகையினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் சதவீதம் 57 ஆகும் சென்ற ஆண்டில் அதன் சதவீதம் 67.93 ஆகும்.

**தொழில்வரி:–** அறிக்கையாண்டில் தொழில்வரி இனத்தில் நிலுவை மற்றும் நடப்பு கேட்பாக ரூ.3130943/–ம் ரூ.1610936/– வசூல் செய்யப்பட்டும் ரூ.1520007/– நிலுவையாகவும் இருந்துள்ளது. நிலுவைத் தொகையினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் சதவீதம் 51.45ஆகும்.

**குடிநீர் கட்டணம்:–** அறிக்கையாண்டில் குடிநீர் கட்டண இனத்தில் நிலுவை மற்றும் நடப்பு கேட்பாக ரூ.3285732/–ம் ரூ.2211963/– வசூல் செய்யப்பட்டும் ரூ.1073769/–ம் நிலுவையாகவும் இருந்துள்ளது. மேற்படி தொகையினை வசூல் செய்ய குடிநீர் இணைப்பு துண்டிப்பு போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இதன் சதவிகிதம் ரூ.67.32 ஆகும்.

**வரியில்லா இனஙகள்:–** அறிக்கையாண்டில் வரியில்லா இனஙகளின் நிலுவை மற்றும் நடப்பு கேட்பாக ரூ.78.00 இலட்சமும் ரூ.55.35 இலட்சம் வசூல் செய்யப்பட்டும் ரூ.22.65 இலட்சமும் நிலுவையாகவும் இருந்துள்ளது. மேற்படி நிலுவைத்தொகையினை வசூல் செய்ய வழக்குகள் தொடரப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது. அதன் 70 சதவிகிதம் ஆகும்.

## நகராட்சியின் அசையா சொத்துக்களின் மீதான மேலாதாய வரவினம்

### 1. சந்தைகள்:–

அ) நகராட்சியால் மூன்று தினசரி சந்தை மற்றும் ஒரு கன்றுகாலி வார சந்தை பாரமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இவைகளின் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2009–2010, 2010–2011, 2011–2012 மூன்றாண்டுகளுக்கு ஏலம் விடப்பட்டு 2009–2010–ம் ஆண்டிற்கு ரூ.6263646/–ற்கு வருமானம் வரப்பட்டுள்ளது.

சந்தைகளிலிருந்து வரும் வருமானம் சந்தை முன்னேற்ற பணிகளுக்கு மற்றும் பொது நலனுக்கு பயன்படுத்தி வருகிறது.

### 2. பார உந்து நிலையம்:–

நகராட்சியால் பார உந்து நிலையம் ஒன்றும், மினி பார உந்து நிலையம் ஒன்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு பார உந்து ஒன்றுக்கு ரூ.15/– வீதமும் மினி பார உந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10/–ம் கட்டணம் வசூலித்து வருகிறது. அறிக்கை

ஆண்டில் வருமானம் ரூ.57,200/—ம் வருமானம் ஆகும். மினி பார உந்து நிலையம் குத்தகைக்கு விடப்பட்டும் உள்ளது. தனியாரால் வண்டி பேட்டையோ, பார உந்து நிலையமோ பராமரிக்கப்படவில்லை.

### 3 ஆடு, மாடு, கோழி வதை செய்யுமிடம்:—

நகராட்சியால் ஒரு ஆடு மாடு கோழி வதை செய்யும் இடம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை ஏலத்தில் விடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வருமானம் ரூ.85,200/—ம் ஆகும். நகராட்சி எல்கைக்குள் தனியாரால் ஆடு மாடு வதை செய்யும் இடம் ஒன்றும் பாராமரிக்கப்படவில்லை.

### 4. கட்டண கழிப்பறைகள்:—

மார்த்தாண்டம் காய்கறிச் சந்தையில் உள்ளே 8 அறைகள் கொண்ட சிறுநீர் கழிப்பறையும் 8 அறைகள் கொண்ட மலகழிப்பறையும் அடஙகிய நவீன கட்டண கழிப்பிடம் கட்ட அரசு நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1992—ம் ஆண்டில் ரூ.20000/— அனுமதிக்கப்பட்டு கட்டிடம் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் நகராட்சி பேருந்து நிலையத்தில் ஒன்றும் பழைய தியேட்டர் சந்திப்பில் ஒன்றும், கல்பாலத்தடி அருகில் ஒன்றும் ஆக மொத்தம் நான்கு நவீன கட்டண கழிப்பறைகள் அறிக்கையாண்டில் ஏலம் விடப்பட்டு வருவாய் ஈட்டப்பட்டது. அதன் மூலம் வரவு ரூ.224900/— ஆகும்.

### 5. மரஙகள் மேலாதாயம்:—

நகராட்சி எல்கைக்குள் உள்ள நகராட்சிக்கு சொந்தமான அனைத்து வகை மரஙகளின் மேலாதாய பலனை அனுபவித்துக் கொள்ள பகிரஙகமாக ஏலம் விடப்பட்டது. மேற்படி ஏலத்தின் மூலமாக அறிக்கையாண்டில் வரவு ரூ.10,260/— ஆகும்.

### 6. வாவுபலி பொருட்காட்சி:-

ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு ஆடி அமாவாசையை முன்னிட்டு 15—07—2009 முதல் 03—08—2009 முடிய 20 தினஙகள் 84—வது வாவுபலி பொருட்காட்சி நடத்தப்பட்டது. இதில் நகராட்சிக்கு வரவாக ரூ.3706063/— வரப்பட்டது. அதில் ரூ.1600000/— செலவு செய்யப்பட்டுள்ளது. நிகர லாபமாக ரூ.2106063/— கிடைத்துள்ளது. பொருட்காட்சி தஙகள் முதாதையர்களை நினைவு கூறும் வகையில் தாம்பிரபரணி ஆற்றின் கரையில் தற்பணம் செலுத்துவதை முன்னிட்டு நடத்தப்பட்டு வருகிறது. அப்போது தற்பணம் செய்யும் மக்கள் பொருட்காட்சி திடலில் கூடுவதால் அஙகு விற்பனை பொருட்களும், மரக்கன்றுகளும், செடி, கொடிகளும் விற்பனை செய்வது கைவினைஞர் பொருட்களையும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் விவசாய பொருட்களும், கைவினை பொருட்களும் காட்சிக்காக வைக்கப்பட்டு

சிறந்தவைகளுக்கு பரிசுகளும், கபடி போட்டிகள் நடத்தப்பட்டு வின்னர், ரன்னர்களுக்கு கேடாயங்களும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு இதற்காக சுழற்கோப்பை பரிசுகள் வழஙகப்பட்டது.

## 7. தொழிற்கூடங்கள் உரிமையாணை–

நகராட்சி எல்கைக்குள் தனியாரால், இரண்டு தீப்பெட்டி தொழிற்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 249–ம் எண் விதிகளின் கீழ் உரிமம் வழஙகப்படுகிறது. அறிக்கை ஆண்டில் அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் நடத்துவதற்கு உரிமையாணை கட்டணமாக ரூ.205470/–ம் சென்ற ஆண்டு ரூ.200481/– வருவாயாக வந்துள்ளது.

## 8. உணவு கலப்பட உரிமையாணை:–

நகராட்சி எல்கைக்குள் நடத்தப்படும் எல்லா உணவு விடுதிகள்,மிட்டாய் கடைகள், பேக்கரிகள் முதலியன 1920–ம் வருடத்திய தமிழ் நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் மற்றும் உணவு கலப்பட தடுப்பு சட்டத்தின்படியும் உரிம கட்டணஙகள் வசூலிக்கப்பட்டுள்ளன. அதன்படி அறிக்கையாண்டில் ரூ.8905/– வசூல் செய்யப்பட்டுள்ளது.

## 9. திரையரஙகம்:–

நகராட்சி எல்கைக்குள் ஒரு திரையரஙகம் உள்ளது. அறிக்கை ஆண்டில் கேளிக்கைவரியாக மேற்படி தியேட்டரிலிருந்து ரூ.5,00,000/– கிடைக்கப்பெற்றது. கழிந்த ஆண்டு ரூ.6,18,706/– கிடைத்தது.

## 10. வி.எல்.சி.கலையரஙகம்:–

நகராட்சி பொருட்காட்சி நடத்தும் இடத்தில் விஜயலட்சுமி முந்திரிபருப்பு கம்பெனியாரால் ரூ.6.00 இலட்சம் செலவில் திருமண மண்டபவம் கட்டப்பட்டு நகராட்சிக்கு இனாமாக வழஙகப்பட்டது. இதனை நகராட்சியால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் திருமண நிகழ்ச்சி நடத்தவும் வாடகைக்கு விட்டு கட்டணம் வரவேற்ப்பு நிகழ்ச்சிக்கு ரூ.2000/–ம், திருமண நிகழ்ச்சிக்கு ரூ.4000/–ம் என நகராட்சியில் வசூல் செய்யப்பட்டு ஆண்டு ரூ.60000/–ம் வருகிறது. அதன் மூலம் வரும் வருமானத்தினை கலையரஙகம் அபிவிருத்தி பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அரசின் உத்தரவின்படி 1–4–1973 முதல் சைக்கிள் வரி ரத்து செய்யப்பட்டது. மேலும் 1920–ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்ட 92–வது விதிகளின்படி வாகனஙகள் மற்றும் மிருகஙகள் இனத்தில் வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. அறிக்கை ஆண்டில் மிருகம் மற்றும்

வாகனத்திற்கு விதிக்கப்பட்ட வரியினஙகளில் வரவும் மற்றும் சுஙக வரி ஈடு செய்வது மூலமாகவும் (டோல் காமன்சேஷன்) மூலமாகவும் வரவு ஏதும் இல்லை.

| | |
|---|---|
| 1. மிருகஙகள் மற்றும் வாகனாதி வரி | – இல்லை |
| 2. டோல் காம்பன்சேஷன் | – இல்லை |
| 3. தஙகும் விடுதிகள் சத்திரஙகள் தண்ணீர் பந்தல்கள் | – இல்லை |
| 4. அட்ஹாக் மான்யம் | – இல்லை |

நகர் மன்றத்தால் தஙகும் விடுதிகளோ சத்திரஙகளோ தண்ணிர் பந்தல்களோ பராமரிக்கவில்லை.

## 3) ஆரம்ப கல்வி

நகராட்சியால் ஆரம்ப பள்ளிகள் ஒன்றும் பராமரிக்கப்பபடவில்லை. நகராட்சி எல்கைக்குள் அரசு மற்றும் தனியார் நிறுவனத்தால் 11 ஆரம்ப கல்வி பள்ளிகள் பராமரித்து வருகிறார்கள். கட்டாயக் கல்வி திட்டம் 1947–ம் ஆண்டு முதல் அமுலுக்கு வரப்பட்டது. நகராட்சியால் ஆரம்ப கல்வி பள்ளிகள் பராமரிக்காததால் கல்வி வரி நகராட்சியால் விதிக்கப்படவில்லை.

### நடுநிலை பள்ளிகள்

இந்நகராட்சியில் நடுநிலைப்பள்ளியோ அல்லது உயர்நிலைப்பள்ளியோ பராமரிக் கப்படவில்லை. நகராட்சி எல்கைக்குள் அரசினாலும் தனியார்களாலும் 8 உயர் நிலைப்பள்ளிகள் பராமரித்து வருகின்றன.

### பிரத்தியேக படிப்பகஙகள்

இந்நகராட்சியால் பிரத்தியேகப் படிப்பகஙகள் ஒன்றும் பராமரிக்கப்படவில்லை

### படிப்பகஙகள் மற்றும் நூல் நிலையஙகள்

நகராட்சியால் நூல் நிலையஙகள் ஒன்றும் பராமரிக்கப்படவில்லை. அறிக்கை ஆண்டில் இரண்டு படிப்பகஙகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. படிப்பகஙகளுக்கு இவ்வாண்டு செலவு ரூ.28,587/– ஆகும். சென்ற ஆண்டு ரூ.24,179– மாவட்ட நூலகக்குழுவினரால் ஒரு படிப்பகம் மற்றும் நூலகம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## பொறியல் பிரிவு

### 1. சிப்பந்திகள்:–

**பொறியாளர் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட அலுவலர்கள் பின்வருமாறு**

| | |
|---|---|
| பொறியாளர் | –1 |
| பொதுப்பணி மேற்பார்வையாளர் | –1 |
| குழாய் பொருத்துநர் | –1 |
| மின் பணியாளர் (தண்ணீர் விநியோகம் பிரிவு) | –3 |
| அலுவலக உதவியாளர் | –1 |
| தண்ணீர் தலைமையிட காவலர் | –1 |
| பம்பு கிளீனர் | –1 |
| கேஙமஸ்துார் | –2 |
| குழாய் திறப்பாளர் | –1 |
| குடிநீர் விநியோக லாறி ஒட்டுநர் | –1 |

திருவாளர்கள். வி. ஜார்ஜ் மற்றும் பி.கே. ரமேஷ் ஆகியோர் அறிக்கையாண்டில் பொறியாளராக பணியாற்றியுள்ளார்கள். இவர்களுக்கான சம்பளம் மன்ற நிதியிலிருந்து வழஙகப்பட்டு வருகிறது . திருமதி.ப. குறள்செல்வி பொதுப்பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றி வருகிறார்.

## 4. சாலை, பாலஙகள் மற்றும் கட்டிடஙகள்

நகராட்சி எல்கைக்குள் கிடக்கும் சாலைகளை நெடுஞ்சாலைகள், பிற சாலைகள் என இரண்டாக பாகுபடுத்தப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைகள் நீளம் சுமார் 11.32 கிலோ மீட்டர் ஆகும். நகராட்சி எல்கை வழியாக திருவனந்தபுரம் நாகர்கோவில் சாலை போகிறது. இதனை நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த மொத்த சாலைகளின் நீளம் 35.90 கிலோ மீட்டர் ஆகும்.

| | | |
|---|---|---|
| 1. சிமெண்ட் சாலைகள் | – | 11.71 |
| 2. தார் சாலைகள் | – | 21.95 |
| 3. இதர சாலைகள் | – | 2.24 |
| | மொத்தம் | 35.90 |

அறிக்கையாண்டில் ரூ..40,96,000/– பொது நிதியிலிருந்து சாலைக்களுக்காகவும் மற்றும் இதர பொதுப் பணிகளுக்காகவும் செலவிடப்பட்டன. சாலைகளும் வீதிகளும் போதிய அகலமுள்ளதாக இருக்கின்றன. ஆக்கிரமிப்புக்கள் ஏற்படாமல் கூடிய மட்டும் தடுக்கப்படுகிறது. சாலை போக்குவரத்து காவல் துறையினரால் கண்காணிக்கப்படுகிறது.

நகராட்சி அலுவலக கட்டிடம் ரூ.17.00 லட்சம் செலவில் வெட்டுவெந்நி சந்தை வளாகத்தில் கட்டப்பட்டு 11–11–2001 முதல் செயல்பட்டு வருகிறது.

நகராட்சி எல்லையில் குழித்துறை தாமிரபரணி ஆற்றில் கட்டப்பட்டுள்ள பாலம் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பாலம் பழுதடைந்துள்ளதால் நெடுஞ்சாலை துறையினரால் ரூ.18.341 கோடி செலவில் ஒரு புதிய பாலம் கட்டும் வேலை நடைபெற்று வருகிறது.

### கருவிகளும், தளவாடங்களும்

நகராட்சிக்கு சொந்தமான 5 பார உந்துகள் உள்ளன. அதில் மூன்று பார உந்துகள் நகராட்சி பகுதிகளிலுள்ள குப்பை கூழங்களை அள்ளி கலவை உரக்கிடங்கில் கொட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டது. ஒருபார உந்து குடிநீர் வழஙக பயன்படத்தப்பட்டு வருகின்றது. ஒரு பார உந்து கழிவு நீர் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வண்டிகள் பராமரிப்பு வகைக்கு நிதியாண்டில் ரூ.14370/— செலவு செய்யப்பட்டுள்ளன.

## 5. தெரு விளக்கு வசதிகள்

நகராட்சி பகுதி முழுவதிலும் மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் 1032 குழல் விளக்குகளும் 209 சோடியம் வேப்பர் விளக்குகளும் 8 ஹாலோஜன் விளக்குகளும், ஒரு ஹைமாஸ்ட் விளக்கும் ஆக மொத்தம் 1250 விளக்குகள் பராமரிக்கப்பட்டது. தெரு விளக்குகள் பராமரிக்கும் பணி மின் வாரியத்தினரால் 15—9—89—ல் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. தெருவிளக்குகள் பராமரிக்க கீழ்குறிப்பிடும் பணியாளர்கள் பணியாற்றினர்.

| | |
|---|---|
| மின் கம்பியாள் | — 2 |
| மின் கம்பி உதவியாளர் | — 2 |

அறிக்கை ஆண்டில் பணியாளர் செலவுகள் தவிர மின் கட்டணம் செலுத்துதல் மற்றும் மின்உபகரணஙகள் வாஙகிய வகைக்கு ரூ.26.00.000/—ம் செலவிடப்பட்டது. நகரில் நிதியாண்டில் அனைத்து விளக்குகளும் நல்ல முறையில் எரியவிடப்பட்டன.

## 6. குடிநீர் விநியோகம்

இந்நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் 1978—ம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுவருகிறது. குடிநீர் நகரின் மையப்பகுதியில் உள்ள தாமிரபரணி ஆற்றிலிருந்து நான்கு எண்ணம் திறந்துவெளி கிணறு மூலம் ஐந்து எண்ணம் உயர் நிலை நீர்த்தேக்க தொட்டிக்கும் மூன்று எண்ணம் தரை மட்ட நீர்த்தேக்க தொட்டிக்கும் ஏற்றப்பட்டு நாளொன்றுக்கு 20.94 லட்சம் லிட்டர் குடிநீர் மக்களுக்கு வழஙகப்பட்டுவருகிறது. மேற்படி ஏழு எண்ணம் நீர்த்தேக்க தொட்டிகளின் கொள்ளவும் மொத்தம் 12.55 இலட்சம் லிட்டராகும் மேற்படி குடிநீரை கொண்டு நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு 90 லிட்டர் குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது.

அவை போக நகரில் மொத்தம் 3564 எண்ணம் குடிநீர் இணைப்புகளும் 75 எண்ணம் பொது குடிநீர் குழாய்களும் உள்ளன. அவற்றில் 3384 குழாய் இணைப்புகள் வீட்டு

இணைப்பாகவும், 179 எண்ணம் வியாபார நோக்கு இணைப்பாகவும், 1 எண்ணம் தொழிற்சாலைக்குரியதாகவும் உள்ளன.

மேலும் நகரில் 18 எண்ணம் அடிகுழாய் மூலமாகவும், 15 எண்ணம் திறந்த வெளி கிணறு மூலமாகவும், குடிநீர் வழஙகப்படுகின்றது. மேலும் குடிநீர் வழஙக இயலாத நிலை ஏற்படும் காலஙகளில் அப்பகுதிகளுக்கு லாரி மூலமாக குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது.

மொத்தத்தில் இந்நகரில் குடிநீர் பற்றாக்குறை ஏதும் இல்லை என கூறலாம்.

**வடிகால்:–**

இந்நகராட்சியில் வடிகால் திட்டம் பராமரிக்கப்படவில்லை. கச்சா வடிகால் நகராட்சி சாலை பணியாளர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 7. நகரமைப்பு பிரிவு

1) நகரமைப்பு விதிகள் இந்நகராட்சியில் அமுலில் உள்ளது. இந்நகராட்சியில் முழுமைத் திட்டம் அரசாணை எண்.எம்.எஸ்.1520 எச்.யு.டி நாள் 3–12–91 அரசால் அனுமதிக்கப்பட்டு தற்பொழுது அமுலில் உள்ளது. ஆனால் நகரமைப்பு திட்டஙகள் ஒன்றும் இந்நகராட்சியில் அமுலில் இல்லை. அறிக்கையாண்டில் திருமதி.எஸ். சுதா நகரமைப்பு ஆய்வராக பணியாற்றி வந்தார் நகரமைப்பு பிரிவில் அறிக்கை ஆண்டில் கட்டிட உரிம கட்டணம் ரூ.304256/–பெறப்பட்டது. சென்ற ஆண்டு மேற்படி வகையில் ரூ.28524/–வசூலானது அறிக்கையாண்டில் 242 எண்ணம் கட்டிட அனுமதிக்கு மனுக்கள் பெறப்பட்டு 236 எண்ணம் மனுக்களுக்கு அனுமதி ஆணை வழஙகப்பட்டு உள்ளது.

**2) ஆக்கிரமிப்புகள்:–**

அறிக்கையாண்டில் ஆட்சேபனைகரமான ஆக்கிரமிப்புகளை நகராட்சி ஆணையாளரால் இடம் பார்வையிட்டு 79 எண்ணம் ஆக்கிரமிப்புகளுக்கு தற்காலிக லைசன்ஸ் வழஙகப்பட்டுள்ளது. மேலும் சாலையோரஙகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடஙகளில் 14 எண்ணம் மொத்த கடைகளை வைக்க அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்படி அனைத்து ஆட்சேபனை அற்ற தற்காலிக ஆக்கிரமிப்புகளுக்கு கட்டணம் வசூலித்து வருகிறது. அறிக்கையாண்டில் ஆக்கிரமிப்பு கட்டணம் ரூ.19474/– வசூல் செய்யப்பட்டுள்ளது. இந்த நகராட்சியில் நகர அளவையர் வருவாய் துறையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். இந்நகராட்சி எல்கையை விரிவாக்க அளவை இலாகாவினரால் அளக்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஆவணஙகள் நகராட்சிக்கு 22–2–1982–ல் ஒப்படைக்கப்பட்டது. நகர அளவை ஊழியர்களுக்கு பணி செலவில் 2/3 பாகம் சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு வழஙக வேண்டும் என மன்றம் தமது 21–11–1981–ம் தேதிய 376–ம் எண் தீர்மானப்படி தீர்மானித்துள்ளது. இந்நகராட்சியில் அளவை பணியாளர்களாக ஒரு நகர அளவையரும், இரண்டு புல உதவியாளர்களும் பணி ஆற்றினர். ஆனால் மேற்படி ஊழியர்களுக்கு 1–4–93 முதல் 31–3–2004 வரை வழக்கப்பட வேண்டிய 2/3 நகராட்சி பஙகுத் தொகை ரூ.14.64 இலட்சத்தில் ரூ.4.64 லட்சம் வழஙகப்பட்டது. மீதித் தொகையினை தவணை முறைகளில் வழஙகப்படும்.

**3) பூஙகாக்கள்:–**

இந்நகராட்சியில் மரம் நடுவதற்கென ஊழியர்கள் எவரும் நியமனம் செய்யப்படவில்லை.

நகராட்சியால் சர்.சி.வி. ராமசாமி ஐயரின் ஞாபகார்த்த பூஙகா ஒன்று நல்ல முறையில் பராமரித்து வருகிறது. இதனை பராமரிக்கவென்று தனியாக பணியாளர் ஒருவரும் இல்லை. பணியாளாரல் மாற்றுப்பணியாக ஏற்பாடு செய்யப்பட்டு பராமரித்து வரப்படுகிறது.

பூஙகாவிலிருந்து எந்த வருமானமும் நகராட்சிக்கு கிடையாது. அதன் பராமரிப்பு செலவு முழுவதும் நகராட்சி நிதியிலிருந்து செலவிடப்படுகிறது

**4) திறந்தவெளி இடஙகள்:–**

நகர் பகுதியில் மொத்தம் 15 எண்ணம் திறந்தவெளியிட.ஙகள் பள்ளி நிர்வாகத்தினராலும், பொது மக்களாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**5) விளையாடுமிடஙகள்:–**

நகர் பகுதியில் மொத்தம் 12 எண்ணம் விளையாடுமிடஙகள் பள்ளி நிர்வாகத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**6) பேரூந்து நிலையம்:–**

நகராட்சி பேரூந்து நிலையம் விரிவு படுத்துவதற்கு நகர் ஊரமைப்புத் துறை மூலம் ரூ.27.00 இலட்சம் கடன் அனுமதிக்கப்பட்டு மார்த்தாண்டம் காளை சந்தை பகுதியில் கட்டி முடிக்கப்பட்டது. மேற்படி பேரூந்து நிலையம் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டார போக்குவரத்து அதிகாரி அவர்களின் ந.க.எண்.25433/அ4/2002, நாள் 20–8–2003 செயல்முறை ஆணையில் ‘சி’ வகுப்பு பேரூந்து நிலையமாக தற்காலிக அனுமதி வழஙகப்பட்டது. மேற்படி பேரூந்து நிலையத்தில் மேலும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 8. பொது சுகாதாரம்

**அமைப்பு:–**

பொது சுகாதாரப்பிரிவில் அறிக்கையாண்டில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து உள்ளனர்.

| | | |
|---|---|---|
| துப்புரவு அலுவலர் | – | 1 |
| துப்புரவு ஆய்வர் | – | 1 |
| துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | – | 3 |
| துப்புரவு பணியாளர்கள் | – | 39 |
| பார உந்து ஓட்டுநர்கள் | – | 3 |

அறிக்கையாண்டில் துப்புரவு அலுவலர் சி. கிறிஸ்துதாஸ், திரு.பி. காளிமுத்து, துப்புரவு ஆய்வராக பணிபுரிந்து உள்ளார்.

அறிக்கை ஆண்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு வாஙகப்பட்ட 21 தள்ளுவண்டிகள் மற்றும் 10 வீல் பாரோ வீடு தோறும் குப்பை சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டுவருகிறது. இந்த பணியை செய்யும் பணியாளர்களை துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள் கண்காணித்து வருகிறார்கள். சென்ற ஆண்டும் இதே முறையில் இ/ப்பணி நடைபெற்று வந்துள்ளது.

துப்புரவு ஆய்வாளர் திடக்கழிவு மேலாண்மை பிறப்பு இறப்பு பதிவு செய்யும் பணி, நோய் தடுக்கும் பணி, கலவை உரம் தயாரித்து வரும் பணி மேற்பார்வையிடல், போலியோ தடுப்பு பணி, டெஙகு காய்ச்சல் தடுப்பு முகாம்கள் நடத்தும் பணி, கடைகளில் உரிமம் ஆய்வு செய்யும் பணி, உணவு கலப்பட வழக்குகளில் நகராட்சி சார்பாக ஆஜராகும் பணி கவனித்து வருகிறார். சென்ற ஆண்டும் இப்பணியே நடைபெற்று வந்துள்ளது.

## பிறப்பு விகிதஙகளும், மகப்பேறு உதவியும்

அறிக்கையாண்டில் 3578 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டது. சென்ற ஆண்டில் 4563 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டது. அறிக்கையாண்டில் பிறப்பு விகிதம் 1000–க்கு 14.6 ஆகும். சென்ற ஆண்டில் பிறப்பு விகிதம் 1000–க்கு 15.2 ஆகும்.

## மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம்–

இந்நகராட்சியின் அறிக்கையாண்டில் ஒரு மகப்பேறு மாது (Midwife) மட்டும் பணி புரிந்து வருகிறார். அவரே மகப்பேறு மையத்தின் பொறுப்பாளர் ஆவார். மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம் பணியினை கவனித்து வருகிறார். அறிக்கை ஆண்டில் 18 மகப்பேறு பார்க்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 16 மகப்பேறு பார்க்கப்பட்டது. மேலும் இவர் தொற்று நோய் தடுப்பு பணிக்கு உதவியாகவும் ஒவ்வொரு வாரம் புதன்கிழமை குழந்தைகளுக்கு தடுப்பு ஊசி போடும் பணியும் கவனித்து வருகிறார். அறிக்கை ஆண்டில் மகப்பேறு மாது மூலம் தடுப்பு ஊசி போடப்பட்டது. விபரம் போலியோ D.P.T. 461, D.T.448, Measles 401,T.T.ANC 362 Iron tablets 15,000,Vit ‘A’ Solution 1692 சென்ற ஆண்டு வழஙகப்பட்ட விபரம் போலியோ 2004–2005– D.P.T.453, D.T.402, Measles 451,T.T. ANC 286, Vit ‘A’ Solution 1692.

தேசிய இளம்பிள்ளை வாதம் தடுப்பு திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு வீடுதோறும் 2004–05 கணக்கிடப்பட்டு 1995 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து நகராட்சி பகுதியில் 13 மையஙகள் அமைத்து ஒரே நாளில் வழஙகப்பட்டது. அறிக்கையாண்டிலும் 13

மையஙகள் அமைத்து ஒரே நாளில் 1995 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து (0–5 வயது) வழஙகப்பட்டது.

<u>தொற்று வியாதியினால் பாதிக்கப்பட்ட இறப்பு விகிதம்</u>

அறிக்கையாண்டில் பதிவானஇறப்புகள் 288 ஆகும். சென்ற ஆண்டில் இறப்புகள் 288, இறப்பு விகிதம் 8.1 ஆகும். அறிக்கையாண்டில் தொற்று நோயினால் இறந்தவர் எவருமில்லை.

<u>கலவை உரம்:–</u>

குழித்துறை நகராட்சியில் கலவை உரக்கிடஙகு பம்மம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 2.07 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. அறிக்கையாண்டில் 1124 மெ.டன் உரம் தயாரிக்கப்பட்டது. சென்ற ஆண்டு 105 மெ.டன் உரம் தயாரிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் விற்பனை ரூ.6900 சென்ற ஆண்டு விற்பனை ரூ.9900 ஆகும். கலவை உரம் மாதிரி ஒன்று சோதனைக்கு அனுப்பப்பட்டு சிறந்த உரம் என கோவை உதவி வேதியியாளா் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன்படி உரக்கலவை போட்டிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு உரிய படிவஙகள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வருடம் சுகாதாரப் பணியாளர்கள் எவரும் பயிற்சிக்கு அனுப்பப்படவில்லை.

<u>உணவு கலப்பட தடுப்பு சட்டம்:–</u>

உணவு கலப்பட தடுப்பு சட்டம் இந்நகராட்சியில் அமுலில் உள்ளது. இந்த ஆண்டில் உணவு மாதிரி எடுக்க இலக்கு 48 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் உணவு கலப்பட பயிற்சி பெற்ற உணவு ஆய்வாளர் உணவு மாதிரி 29 எடுக்கப்ட்டது. உணவு கலப்பட தடுப்பு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் அறிக்கையாண்டின் முடிவு வரை 9 வழக்குகள் நிலுவையில் உள்ளன. 2 வழக்குகள் சென்னை உயர் நீதி மன்றத்தில் மேற்முடிவு செய்யப்பட்டது. 1 வழக்கு நாகர்கோவில் முதன்மை நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது.

<u>பாதுகாப்பு மற்றும் விழாக்களும்:–</u>

இந்நகராட்சியில் குறிப்பிடப்பட்ட அறிவிப்பு செய்யப்பட்ட விழாக்கள் ஒன்றும் இல்லை. அறிக்கையாண்டில் 80–வது வாவுபலி பொருட்காட்சி இலாகா மூலம் நகராட்சி வாவுபலி பொருட்காட்சி மைதானத்தில் 25–7–2005 முதல் 8–8–2005 முடிய நடைபெற்றது இதில் வருமானம் ரூ.16,45,006 செலவு ரூ.7,15,100 ஆகும்.

## வெறி நாய் ஒழிப்பு:–

அறிக்கையாண்டில் வெறிநாய்கள் ஏதும் நகராட்சியால் கொல்லப்படவில்லை.

## பொது கழிப்பிடஙகள் மற்றும் சிறுநீர் கழிப்பறைகள்:–

இந்நகராட்சியில் சென்ற ஆண்டு இரண்டு எண்ணம் பொது கழிப்பிடஙகளும், மூன்று எண்ணம் பொது சிறுநீர் கழிப்பிடஙகளும் கட்டப்பட்டு நல்ல முறையில் சுகாதாரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு அதே அமைப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது.

### பொது கழிப்பிடஙகள்

1) நரியன்விளை பொது கழிப்பறை
2) குழித்துறை ஆர்.சி.தெரு பகுதி பொது கழிப்பறை

### பொது சிறுநீர் கழிப்பறை

1) குழித்துறை சந்திப்பு பகுதி
2) மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பகுதி
3) மார்த்தாண்டம் மஞ்சு ஆஸ்பத்திரி பெண்களுக்கு உள்ள பகுதி
4) கழுவன் திட்டை ஆர்.சி.தெரு
5) வி.எல்.சி. கிரவுண்ட்
6) நரியன்விளை பகுதி

**வரவான மான்யஙகள் :–** அறிக்கையாண்டில் இந்நகராட்சிக்கு அரசிடமிருந்து கீழ்கண்ட மான்யஙகள் பெறப்பட்டுள்ளன.

1. சட்ட மன்ற உறுப்பினர் நிதி – ரூ. 7.55 லட்சம்

## வரவான கடன்கள்:–

அறிக்கையாண்டில் இந்நகராட்சிக்கு அரசிடமிருந்து கடன்கள் ஏதும் பெறப்படவில்லை.

## குறியீடுகள்:–

அறிக்கையாண்டில் நகராட்சி நிதியிலிருந்து புதிதாக முதலீடு எதுவும் செய்யப்படவில்லை. சென்ற அறிக்கையாண்டில் இறுதியிருப்பாக இருந்த முதலீடு தொகை ரூ.140845/– தொடர்ந்து இருப்பாக இருந்து வருகிறது.

**திருப்பி செலுத்த வேண்டிய கடன்கள்:–**

அறிக்கையாண்டில் திருப்பி செலுத்த வேண்டிய கடன் தொகையாக அசலில் ரூ.159.19 இலட்சமும், வட்டிமீதி ரூ.58.74 செலுத்தப்பட வேண்டியதில் அசல் தொகையாக ரூ.3.79 இலட்சமும் வட்டித்தொகை மதிப்பு ரூ.1.60 இலட்சம் செலுத்தப்பட்டு நிலுவையாக அசலில் ரூ.155.40 இலட்சம் வட்டியாக ரூ.57.14 இலட்சம் உள்ளன.

**வழஙகப்பட வேண்டிய நிலுவை பட்டியல்கள்:–**

அறிக்கையாண்டில் வழஙகப்பட வேண்டிய நிலுவை பட்டியல்கள் ஏதுமில்லை.

## 9. 2009–2010–ல் திட்டப்பணிகள்

1) சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்–அனுமதிக்கப்பட்டதொகை ரூ.10.50 லட்சம்

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. | Stage of work |
|---|---|---|---|
| 1 | Construction of Retaining wall at Bridge ward Near Mr. Sounthar Raja's House the ward No.9 | 2.00 | Work completed |
| 2 | Providing Existing Street Light at Gopalan House to Devadas House in Bridge Ward No.9 | 0.30 | Work completed |
| 3 | Providing cover Slab at R.C.Street near Public Toilet to Railway Station Road in Ward No.3 | 2.00 | Work completed |
| 4 | Providing 160 mm to 200 mm dia Deep Bore well at Government Primary School in Bridge ward at Kuzhithurai Municipality | 1.00 | Work completed |
| 5 | Providing 160 mm to 200 mm dia Deep Bore well at Thittivilai Street Near Balakrishnan House in Bridge ward at Kuzhithurai Municipality | 1.00 | Work completed |
| 6 | Providing 160 mm to 200 mm dia Deep Bore well at Government Prinmary School at Kuzhithurai | 1.25 | Work completed |

2) பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்– அனுமதிக்கப்பட்ட மான்யம் தொகை ரூ.6.00 லட்சம்

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. | Stage of work |
|---|---|---|---|
| 1 | Construction of Library Building at R.C. Street Near Dimppo stand in Market Ward No.20 | 3.00 | Work completed, Completion report submitted |
| 2 | Construction of Waiting Shed at Vettuvenni infront of Government Hospital | 3.00 | Work completed, Completion report submitted |

3) 12–வது நிதிக்குழு மானியம் தொகை ரூ. 9.94 லட்சம்

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. | Stage of work |
|---|---|---|---|
| 1 | Construction of Retaing wall and Septic Tank compost yard | 5.00 | Work completed |
| 2 | Providing B.T.Surface at Palavilai road | 1.30 | W.B.M.completed |
| 3 | Providing C.C.Pavement Kuzhithurai Taxi stand | 0.50 | Work completed |
| 4 | Providing C.C.Pavement at Edaivilagam C.S.I. Chruch | 0.50 | Work completed |
| 5 | Providing C.C.Pavement at Padaparai | 0.30 | Work completed |
| 6 | Creation of Data Base and Payment of E. Charge | 2.34 | Work completed |

4) மார்த்தாண்டம் பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகள் தொகை ரூ.365.86 லட்சம் செலவில் நடைபெற்று வருகிறது.

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. | Stage of work |
|---|---|---|---|
| 1 | Marthandam Bus Stand Improvement Works (G.O.Ms.No.37, MA & WS. Department dated 30-1-2008 | 365.86 | A-Block Roof Slab work progress. Block roof slab work in progress |

### 5) நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.14.77 லட்சம்

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. | Stage of work |
|---|---|---|---|
| 1 | Construction of Drainage and Retaining wall near Edaivilagam C.S.I. Chruch in ward No.2 | 0.50 | Completed |
| 2 | Patch work for Panniyani Near Aseervatham House | 0.15 | Completed |
| 3 | Attinding Bust for the Pumping Main and Supply main at Ward in Municipal limit | 0.25 | Completed |
| 4 | Pump Line Leakage work infront of D.M. convent Assisi Nilayam at North Street | 0.12 | Completed |
| 5 | Providing Volve pit near O.H.T. Marthandam, North Street | 0.10 | Completed |
| 6 | Supply and Delivery of Electrical spares for the Maintenance of Street Light | 9.00 | Completed |
| 7 | Maintentance and Repair works for 3 Numbers 40 KVA Disel Generator in Municipal Head Works | 2.25 | Completed |
| 8 | Construction of Enterance gate at Compost yard and Remaring the Garbage waste in the compost yard | 1.50 | Completed |
| 9 | Construction of Drainage and cover slab at Gotheswaram road | 0.70 | Completed |

## குடிசை பகுதிகள் விபரம்

இந்நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட குடிசை பகுதிகளாக 4 எண்ணமும், அங்கீகரிக்கப்படாத குடிசை பகுதிகளாக 2 எண்ணமும் உள்ளன.

### அங்கீகரிக்கப்பட்ட குடிசை பணிகள்

பெயர்

1) நரியன்விளை குடிசை பகுதி
2) கொடுங்குளம் குடிசை பகுதி
3) பறம்பு குடிசை பகுதி
4) ஆர்.சி.தெரு, மார்த்தாண்டம்

### அங்கீகரிக்கப்படாத குடிசை பகுதிகள்

1) ஆர்.சி.தெரு, குழித்துறை
2) பழவார் குடிசை பகுதி

## 10. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்

30–6–2004 அன்று இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வந்த 5 சத்துணவு மையஙகளும் ஒருஙகிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்பட மேற்படி துறைக்கு ஒப்படைக்கப்பட்டது.

## 11. சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம்

அறிக்கையாண்டில் மேற்படி திட்டத்தில் கீழ்கண்ட இனஙகளுக்கு இந்திய அரசாலும், தமிழக அரசாலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது

### 1) சுயவேலை வாய்ப்புத் திட்டம் (USEP)

2009–2010–ம் ஆண்டிற்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மானியம் ரூ.74518/– அனுமதிக்கப்பட்டு 12 மகளிருக்கு வஙகிகளில் கடன் வழஙகி பயனீட்டு செய்யப்பட்டது.

### 2) சுயவேலை வாய்ப்புத் திட்டம் – பயிற்சி (USEP- Trainning)

2009–2010–ம் ஆண்டு ரூ.111777/– மானியமாக பெறப்பட்டது. இந்த தொகையில் 15 மகளிருக்கு கணணி பயிற்சி வழஙகப்பட்டுள்ளது.

### 3) பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றம் ( UWSP )

2009–2010–ம் ஆண்டு மானியம் ரூ.55888/–அனுமதிக்கப்பட்டு பிச்சிபூ பெண்கள் மேம்பாட்டுக் குழுவிற்கு துணி வியாபாரம் செய்ய ரூ.1.100–ம் கடன் வழஙகப்பட்டுள்ளது.

### 4) சிக்கன நாணய சஙகம் (Thirft and credit Soceity)

2009–2010–ம் ஆண்டிற்கு பெறப்பட்ட மானியம் ரூ.18629/–பெறப்பட்டு முதிர்ச்சி அடைந்த 3 குழுக்களுக்கு சுழல் நிதியாக வழஙகப்பட்டுள்ளது.

## 5) சமுதாய கட்டமைப்பு

2009–2010–ம் ஆண்டிற்கு பெறப்பட்ட இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.32259/– நிதியாக பெறப்பட்டு அதனை மருத்துவ தேவை குறித்து விழிப்புணர்வு முகாம் நடத்தவும், கன்வீனர்களுக்கு பயன்பாடு குறித்து பயிற்சியும் நடத்தி பயன்படுத்தப்பட்டது.

## 6) நகர்புற வேலை வாய்ப்புத் திட்டம் (UWEP)

2009–2010–ம் ஆண்டு மானியமாக பெறப்பட்டு ரூ.74518/– செலவில் சிமெண்ட் தளம் பணி நடைபெற்று மானியம் பயனிட்டு செய்யப்பட்டது.

## பாலிகா சமர்த்தி யோஜனா திட்டம்

அறிக்கையாண்டில் பாலிகா சமிர்த்தி யோஜனா திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை.

## தேசிய மகப்பேறு உதவித் திட்டம்

2009–2010–ம் நிதி ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 38 மனுக்கள் பெறப்பட்டு அதில் 38 பேர்களுக்கு தலா ரூ.6000/– வீதம் மொத்தம் ரூ.2,28,000/– நிதி வழுஙகப்பட்டது. நிலுவை மனுக்கள் ஏதுவும் இல்லை.

## சிறுசேமிப்புத் திட்டம்

2009–2010–ம் வருடத்திற்கு சிறுசேமிப்பு வசூல் செய்ய 100 இலட்சம் மாவட்ட ஆட்சியாளரால் நிர்ணயம் செய்யப்பட்டு ரூ.18.44 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. .

# 12. வழக்குகள்

2009–2010–ம் வருட மொத்தம் 5 வழக்குகள் நிலுவையில் இருந்தன. அறிக்கையாண்டில் 54 எண்ணம் வழக்குகள் பெறப்பட்டன.

## 13) தணிக்கை:–

அறிக்கையாண்டு துவக்கத்தில் 985 தணிக்கை தடை இருந்தன. 46 எண்ணம் தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆண்டின் முடிவில் 939 தணிக்கை தடைகள் நிலுவையாக உள்ளன.

## 14) நிதி நிலைமை:–

அறிக்கையாண்டின் துவக்கத்தில் ஆரம்ப இருப்பாக ரூ.1,57,83,000 மொத்த வரவாக ரூ.5,07,09,000 மொத்த செலவினமாக ரூ.4,25,87,000 இறுதியிருப்பாக ரூ.2,39,05,000 உள்ளன.

## 15) முடிவுரை:–

அறிக்கையாண்டில் வழக்கம்போல் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் நகர் மன்ற தலைவர் தேசிய கொடி ஏற்றி வைக்க மிக எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது. மேற்படி வைபத்தில் அனைத்து நகர் மன்ற உறுப்பினர்களும், நகரின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். ஆணையாளர் அவர்கள் அவரோடு பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் ஏனைய ஊழியர்களிடையே சுமூகமான உறவு இருந்தது. அதை போல் தலைவர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடன் ஆணையர், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உறவு சுமூகமாக முறையில் இருந்தது. நிர்வாகம் சரிவர நடக்க அனைவரும் ஒத்துழைப்பு நல்கினார்கள்.

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.

@@@@@